RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s22216

# புறநானூற்றில் வீர மறவர்க்கு நடுகல் வழிபாடு

செ. தாமரைச்செல்வி [அ, *], ச. மல்லிகா [அ]

[அ] தமிழாய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகதுடன் இணைவு பெற்றது), தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா

# Sepulchral Stone (Nadukal) Worship to Courageous Warriors in Purananooru

S. Thamaraiselvi [a], S. Mallika [a, *]

[a] Department of Tamil, A.P.C. Mahalaxmi College for Women, (Affiliated to Manonmaniam Sundaranar University), Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: kamaliroja0@gmail.com

Received: 27.09.2022
Revised: 19-11-2022
Accepted: 22-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

The tradition of society is determined by the condition of the people living in that society. The Sangam Tamils gave a special place to their proud heroism in life. In the Tamil literary tradition, heroism has been taught as an important part of the people of the Sangam age. The hero feels sorry for the days when he was not physically hurt in the war as the days he spent in vain in his life. It was believed at that time that a warrior who dies on the battlefield will attain the heavens of valour. They planted Sepulchral Stones (Nadukal) in appreciation of his valour. The history of the Taller Sepulchral system gradually became shortened and became smaller and later became a big temple can also be traced back to history. The worship of the Shorter Sepulchral stone occupies a prominent place in the Purananooru. The worship of God arose during the time when man lived as a nomad. Man, worships God to get rid of the sufferings of his lifetime and to avoid trials in life. As such a God, the people of the Purananooru rea had a high tradition of worshipping the sepulchral stone as deities. The worship of the sepulchral stone also refers to the tradition of worshipping those who have fought courageously, those who have died facing the north when they were defeated in the war, the chaste women, and those who have performed great deeds. The name and merits of the deceased are inscribed on the stone and worshipped as a Deity. Even today this form of worship is prevalent among the Tamils. The worship of the sepulchral stone is also a symbol of gratitude. This article examines the evidence of the worship of such stones to courageous warriors in the Purananooru.

**Keywords:** Purananooru, Deities, Nadukal, Worship, Sangam People

## முன்னுரை

பண்டைத்தமிழர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். வாழ்ந்து சிறந்த வீரர்களின் வரலாற்றை எடுத்துரைக்கும் பெருமையினையுடையது புறநானூறு. தமிழகத்தை ஆண்ட சேர, சோழ,பாண்டிய மன்னர்களின் வீரத்தையும், குறுநிலமன்னர்களின் வீரத்தையும் வெற்றிப் பெருமிதத்தையும் விளக்கிப் பேசுகிறது. அவையும், ஆனியல் பார்ப்பன மாக்களையும், பெண்டிரையும், பிணியுடையோரையும் விலக்கிப் பண்டைய வேந்தர்கள் போர்புரிந்த அறப்போரின் சிறப்பைப் புறநானூறு போற்றியுரைக்கின்றது. நாட்டுக்காகவும் நாட்டை ஆளும் வேந்தனுக்காகவும் வீரர்கள் போர்புரிந்து உயிர் விட்டதனையும் பாடியுள்ளது. அவ்வாறு போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு

நடுகல் நடுதல், நட்டகல்லைச் சுற்றி மயிற்பீலிசூட்டி மதுத்துளி வார்த்து வழிபட்ட செய்தியையும் எடுத்துரைக்கின்றது. புறநானூறு வழி வீரத்திற்கும், அதனைக் காக்கப் போரிட்டு வீரமரணமடைந்து நடுகற்கலாக நின்ற மறவர்களுக்கு மக்கள் கொடுத்த முதன்மையும் புலனாகின்றது. நடுகல்லைத் தெய்வமாகப் போற்றி வழிபட்ட மரபை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நடுகல் - சொற்பொருள்

நடுகல் என்பதற்கு நட்டகல் என்று பொருள். நடுகல்லை நட்டகல், நடப்பட்டகல் எனப் புறநானூறும் நாட்டப்படுங்கல் எனத் தொல்காப்பியமும், நாட்டியகல் என இளம்பூரணரும் நடுங்கல் எனச் சிலப்பதிகாரமும் குறிக்கின்றன. சமுதாயச் சிறப்புமிக்க இயல்புகளைக் கொண்டிருந்தவர்களின் இறப்பிற்குப்பின் அவர்களது நினைவாக நடப்பட்டகல்லே நடுகல்லாகும். வீரத்தைப் பாராட்டி நடப்படுவதால் இதனை வீரக்கல் என்றும் அழைப்பர்.

## நடுகல் அமைத்தல்

சங்ககாலத் தமிழர்களிடம் வீரம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. ஒளிருவாள் அருஞ்சமம் முருக்கி களிறு எறிந்து பெயர்தலை ஆண்மகனுக்குரிய கடமையாக வகுத்துள்ளார்கள். அரசர் குடும்பத்தில் பிறந்தகுழந்தை இறந்தாலும் உயிரோடு பிறக்காமல் தசைப்பிண்டமாகப் பிறந்தது ஆயினும் அதற்கும் வீரத்திற்கும் தொடர்பு இல்லையே என்று கருதாமல் அதையும் தவறாமல் வாளால் புண்படுத்திப் புதைப்பதை,

“குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்

ஆளன் றென்று வாளிற் றப்பார்” (Avvai Duraisamy Pillai, 1947)

என்று வீரத்திற்குக் கொடுக்கப்பட்ட சிறப்பினைப் பாடுகிறது புறநானூறு. நாடு பொது என்ற சொல்லைப் பொறாமல் பகை நாட்டின் மீது மன்னன் படையெடுத்துச் செல்கின்றான். அவனுடன் சென்ற மறவர்கள் போரிட்டு வீரமரணம் அடைகின்றனர். அம்மறவனுக்கு மன்னனும் மக்களும் அவனது பெயரையும் புகழையும் கல்லில் எழுதி நடுகல்லாக நட்டி வைத்திருக்கின்றார்கள். வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கத்தினை,

“என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை

முன்னின்று கல்நின்றவர்" (Varadharasan, 1959)

எனத் திருக்குறள் மொழிகின்றது. நடுகல் அமைத்து தெய்வமாக வழிபடும்முறை நெடுங்காலம் தொட்டே உருவாக்கப்பட்டது. நடுகல் அமைக்கும் முறையைத் தொல்காப்பியர்,

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்த லென்று

இருமூன்று மரபிற் கல்லொடு” (Thamizhannal, 2010)

என்று நடுகல் நடுதலின் ஆறுநடை முறைகளைக் கூறியுள்ளார். மலைக்குச் சென்று நடுகல் நடுவதற்கு ஏற்ற சிறந்த கல்லைத் தேர்ந்தெடுத்து அக்கல்லினை நீரினால் கழுவிச் சுத்தம் செய்து உரிய இடத்தில் நட்டும், அவற்றில் இறந்த வீரர்களின் பெயர்களையும், வீரச்செயல்களையும் எழுதி சிறப்புச் செய்துள்ளனர். நடுகல்லிற்குப் பூசை செய்து தெய்வமாக, இறந்த வீரனின் திறமையையும் புகழையும் போற்றி வணங்குவதைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. வீரனுக்காக நடப்பட்டு இருந்தாலும் நாளடைவில் மானம் கருதி உயிர் துறந்த மன்னர்களுக்கும், கற்புநலன் கருதி உயிர் துறந்த மகளிர்களுக்கும் நடுகல்நட்டு அவர்களை வழிபடும் வழக்கத்தையும் உண்டாக்கி இருக்கிறது.

நடுகற்களின் ஆரம்பநிலையைக் கற்பதுக்கை, கற்றிட்டை என்ற பெயரால் அழைத்தனர். இறந்த வீரரின் உடலை மூடிய கற்குவியல்கள் ‘பதுக்கை’ என அழைக்கப்பட்டன. கல்திட்டு இறந்தோரை மூடிய

அல்லது புதைத்த மேடுகளாக அமைக்கப்பட்டிருந்தன. பதுக்கையின் மேல் அமைக்கப்பட்ட நடுகல், அதன் அருகில் அமைக்கப்பட்ட நடுகல் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. பதுக்கைகள் இல்லாமல் தனியாக நடுகற்கள் அமைக்கும்முறை அவற்றின் படிப்படியான வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன. தொடக்கத்தில் நடுகற்கள் பெரும்பாலும் பாழ்பட்ட இடங்களிலும் பதுக்கைகள் சூழ்ந்த இடங்களிலும் அமைக்கப்பட்டிருந்தன.

"நடுகற் பிறங்கிய வுவலிடு பறந்தலை"

என்று புறநானூறு தழைகள் இடப்பட்டப் பாழ்பட்ட இடங்களில் நடுகல் அமைந்ததைக் குறிப்பிடுகிறது (Avvai Duraisamy Pillai, 1947).

"அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்

திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்

உன்ன மரத்த துன்னருங் கவலை"

என்று வீரன் ஒருவன் இறந்ததும் உடலத்தைக் கல்லால் மூடப்பட்டஃபதுக்கப்பட்ட தன்மையினால் அவற்றை உண்ண முடியவில்லை என்று கழுகுகள் வருந்தியதைப் பற்றிப் புறநானூறு கூறுகிறது (Avvai Duraisamy Pillai, 1947). இறந்தவர்களின் மேல் கற்களைக் கொண்டு மேடாக அமைக்கப்பட்டிற்கும் மேட்டிற்குப் பதுக்கை என்று பெயர். பண்டைத் தமிழர்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறைகளில் ஒன்றாகப் பதுக்கைகள் அமைக்கும் முறைஇருந்ததனை அறிய முடிகிறது. இதனை அகநானூறு,

"வெண்நுனை அம்பின் விசைஇட வீழ்ந்தோர்

எண்ணுவரம்பு அறியா உவல்இடு பதுக்கைச்

சுரம்கேழ கவலை கோட்பாற் பட்டென" (Balasubramaniyan, 2004)

ஏன்கிறது. போரில் வெண்மையான முனை கொண்ட அம்பு பாய்ந்து உயிரை விட்டோரின் உடல்கள் எண்ணிலடங்காதவை. அதற்கு மேல் தழையிட்டு மூடிய பதுக்கைகள் இருந்தன. தழையால் மூடிய கற்குவியல்களைக் கொண்ட, எவரும் போவதற்கு அஞ்சும் பாலைநில வழியில் தலைவன் சென்றான் என்று அகநானூறு கூறுகிறது. நடுகற்களைச் சுற்றிக் கேடயப்படை வேலிபோல வரிசையாக அமைக்கப்பட்டும் அவற்றைத் தாங்குவதற்கு அவ்விடத்தைச் சுற்றி வேல்கள் நிறுத்தப்பட்டிருக்கும் செய்தியையும் அறியமுடிகின்றது. மேலும் நடுகல்லின் மீது அவ்வீரன் பயன்படுத்திய போர்க்கருவிகளையும் சார்த்தி வைத்திருக்கின்றனர்.

"பல்லாத் திரணிரை பெயர்தரப் பெயர்தந்து

கல்லர் விளையர் நீங்க நீங்கான்

வில்லுமிழ் கருங்கணை மூழ்கக்

கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே" (Avvai Duraisamy Pillai, 1947)

என்னும் பாடலில் ஆநிரைகளைக் கவரும் வெட்சிப்போரிலும் அவற்றைப் பகைவர் கவர்ந்து செல்லாதவாறு தடுத்துக் காத்த கரந்தைப் போரிலும் விழுப்புண்பட்டு மாய்ந்த வீரர்களுக்கு அவர்களின் பெருமையைப் பிறர் அறியுமாறு நடுகல் நட்ட சிறப்பைப் புறநானூறு புலப்படுத்துகின்றது. போரில் வீரமரணம் அடைந் த மறவர்களின் நடுகற்களுக்கு மயிற்பீலிச் சூட்டி வழிபடும் மரபும் தோன்றியுள்ளது. இதனை அகநானூறு,

"வீளை அம்பின் விழுத்தொடை மறவர்

நாள்ஆ உய்த்த நாம வெஞ்சுரத்து,

நடைமெலிந்து ஒழிந்த சேண்படர் கன்றின்

கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்” (Balasubramaniyan, 2004)

எனப் போரில் வீரமரணம் அடைந்த மறவர்களின் நடுகல்லையும் அவ்வீரர்களின் வீரத்தையும் சிறப்பிக்கின்றது.

நாளடைவில் நடுகல்லை மழை வெயிலில் இருந்து காக்கும் பொருட்டு அக்கல்லைச் சுற்றிப் பந்தல் அமைத்த முறையையும் புறநானூறு எடுத்துரைக்கின்றது.

“உயரிசை வெறுப்புத் தோன்றிய பெயரே

மடஞ்சான் மஞ்ஞை யணிமயிர் சூட்டி

இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்

படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே” (Avvai Duraisamy Pillai, 1947)

என்கிறது புறநானூறு. உயர்ந்த புகழ்மிக்க வீரனுடைய பெயர் மென்மையான மயிலிறகால் சூட்டப்பட்ட பந்தலின்கீழ் அமைக்கப்பட்ட நடுகல்லில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் நடுகற்களை நட்டியுள்ளனர். வீரனின் உயிரைக் காப்பாற்றி அவனுடன் இறந்த விலங்குகளுக்கும் நடுகற்கள் அமைக்கப்பட்டுள்ளன. குதிரை, நாய், யானை, கோழி போன்ற விலங்குகளுக்கு நடுகற்கள் எழுப்பப்பட்டுள்ளன. இத்தகைய நடுகற்கள் நன்றி உணர்வின் அடையாளமாக காணப்படுகின்றன.

## உருவம் பொறித்தல்

சங்கத்தமிழர் நாடுகாக்கும் பொருட்டு இன்னுயிரை நீத்த வீரர்களுக்கு நடுகற்கள் நாட்டியுள்ளனர். அந்நடுகற்களின் மீது வீரர்களின் உருவங்களைப் பொறித்து அதற்குக்கீழே அவர்களின் பெயர், பிறப்பு, இறப்பு செய்த வீரதீரச் செயல்கள்பற்றி எழுதியுள்ளனர். இத்தகைய நடுகற்களுக்கு படையல் இட்டு வணங்கியுள்ளனர். நடுகற்கள் அக்கால வரலாற்றை அறிய ஆராய்ச்சியாளர்களுக்குச் சான்று ஆதாரங்களாக விளங்குகின்றன. வீரமறவர்களுக்காக நடப்பட்ட நடுகல் அதன் அமைப்புத் தன்மையைப் பொறுத்து வகைப்படுத்தப்படுகின்றன.

“அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்

தினிநட் டனரே கல்லுங் கன்றொடு” (Avvai Duraisamy Pillai, 1947)

என புறநானூறு அழகான மயிற்பீலிசூட்டி, மாண்ட வீரனின் பெயரை நடுகல்லில் பொறித்தச் சிறப்பினைப் புலப்படுத்துகின்றது. இதனை அகநானூறு,

“பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்

வேல் ஊன்று பலகை” (Balasubramaniyan, 2004)

என்று கூறுகிறது. வீரர்களின் நடுகற்களில் அவர்களின் பெயரும் பெருமையும் எழுதப்பட்டிருக்கும். மயிற்பீலி சூட்டப்பட்ட இந்நடுகற்கள் அவ்வழியே செல்பவர்களுக்குப் பகையாளிகள் போரிட வருவது போல இருக்கும் தன்மையை விளக்குகின்றது. மறவர்களுக்கு நடப்பட்ட நடுகல்லில் வீரனின் பெயரும், புகழும் எழுத்துக்களால் செதுக்கப்பட்டு சில இடங்களில் வீரனின் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

“விழுத்தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர்

எழுத்துடை நடுகல் இன்நிழல் வசதியும்” (Balasubramaniyan, 2004)

என்று அகநானூறு வில்லெய்தி இறந்து போன மறவர்களின் பெயரும் புகழும் எழுதியிருக்கும் தன்மையை எடுத்துரைக்கின்றது. இதனை

“விழுத்தொடை மறவர் வில்லிடைத் தொலைந்தோர்

எழுத்துடை நடுகல் அன்ன” (Parimanam & Balasubramaniyam, 2004)

என்று ஐங்குறுநூறு குறிப்பிடுகின்றது. வில்லிலிருந்து எய்திய அம்பினால் உயிர்நீத்த வீரனின் பீடும் பெயரும் எழுதப்பட்ட எழுத்துடைநடுகல் பண்டைமக்கள் எடுத்தனர் என்பதை விளக்குகிறது. நடுகல் எழுத்துடை நடுகல்லாகவும், பெயரோடு கூடிய நடுகல்லாகவும் இருந்ததை அறிய முடிகின்றது. அச்சம் தரும் வீரனின் உருவம் குறுகிய இடையுடனும், பெயரும் அவனால் விளைந்த பயனும் குழிந்த எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருப்பதையும் காணமுடிகின்றது. சிதைந்த நடுகல்லில் வீழ்ந்தாரின், பெயரையும், பீடையும் உணர்த்துவது மட்டுமின்றி வழியிடை நேரக்கூடிய கொடுமையினையும் உணர்த்துவதாகக் கோடுமாயெழுத்து பொறித்த நடுகல் இருப்பதையும் எடுத்துரைக்கின்றது. ஆங்காங்கே சிதைவுற்ற நடுகல்லையும் காணமுடிகின்றது. அரிய போரிலே எதிரிகளின் படையை அழித்து உயிர்மாய்ந்த வீரர்களின் நடுகற்கள்வரிசையாக அமைந்துள்ளன. இவ்வாறாக மறவர்களுக்காக நடப்பட்ட நடுகற்களின் அமைப்புமுறையை அறியமுடிகின்றது.

## வழிபாடு செய்தல்

தொல் தமிழர் மரபில் நடுகற்கள் வீரகற்களாகப் போற்றப்பட்டிருக்கின்றன. மக்கள் போரில் வீரமரணமடைந்த மறவர்கள் தம்மையும் தம்குடிகளையும் காக்க வந்தவர்கள் என்றும் அவர்களைக் காவல் தெய்வங்கள் என்றும் போற்றினர். அந்நடுகற்களைத் தவறாமல் வணங்கினால் மழைவளம் பெருகி நாடு சிறப்புற்றுப் பயிர்வளம் சிறக்கும் என நம்பினர். நடுகற்களை வணங்கிச் சென்றால் போருக்குச் செல்லும் நிலத்தலைவர்களும், வீரர்களும் வெற்றிப்பெற்றுத் திரும்புவர். மக்கள் நோய் நொடியிலிருந்து விடுபடுவார்கள் என்ற நம்பிக்கைகள் இருந்தன என்பதைப் புறநானூறு கூறுகின்றது.

“நடுகல்லில் தெய்வம் உறைவதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. நடுகல் வழிபாடுதான் பிற்காலத்தில் சிறு தெய்வ வழிபாடாக வளர்ந்துள்ளது" என்று வே.அண்ணாமலை சிறுதெய்வ வழிபாட்டிற்கு முன்னோடியாக நடுகல் வழிபாடு இருந்திருக்கின்றது என்கிறார் (Annamali, 2000). இன்றும் கிராமப்புறங்களில் காக்கும் தெய்வங்களாக மதுரைவீரன், கருப்பன், இருளன், நொண்டி முதலியவர்களின் வழிபாடு நடுகல் வழிபாட்டின் எச்சங்களாகத் திகழ்ந்ததை அறியமுடிகின்றது.

கண்ணில் காண முடியாத கற்பனையில் உருவான தெய்வங்களை வழிபடுவதை விடக் கண்ணுக்கு முன்னால் களிற்றைக் கொன்று பகைவர்களை வென்று பின்னால் வருபவர்களுக்கு வழிகாட்டியாக நின்ற வீரர்களின்,நடுகற்களை வழிபடலாம் என்று அக்கற்களுக்கு நெல்லும் பூவும் சொரிந்து வழிபட்டனர். இதனை,

“ஒன்னார்த் தெவ்வர் முன்னின்று விலங்கி

ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந் தெனக்

கல்லே பரவி னல்லது

நெல்லுகுத்துப் பரவுங் கடவுளுமிலவே” (Avvai Duraisamy Pillai, 1947)

என்கிறது புறநானூறு. நடுகல் வழிபாட்டைவிட சிறந்தவழிபாடு இல்லை என்று எண்ணுமாறு நடுகல் வழிபாடு தமிழகத்தில் சிறப்புற்றிருந்ததை அறியமுடிகின்றது.

சங்ககாலப் பெண்கள் நடுகற்களை வழிபட்டுத் தனக்கு வேண்டும் வரங்களைப் பெற்றுள்ளனர் என்பதனை அள்ளூர்நன்முல்லையார்

“அம்குடிச் சீறூர்

ஒலிமென் கூந்த லொண்ணுத லரிவை

நடுகற் கைதொழுது பரவு மொடியாது

விருந்தெதிர் பெறுகதில் யானே யென்னையும்" (Avvai Duraisamy Pillai, 1947)

என்று பாடுகிறார். களிறுகள் மோதிச் சிதைந்த முள்செடியாலாகிய வேலியும் மக்கள் அரிதாகவே வந்து உண்ணும் நீர்நிலையும் உடைய ஊரில் வாழ்ந்த மறக்குலப் பெண் தன் கணவன் பகைமுடித்து வரவேண்டும் என நடுகல்லிடம் வேண்டுவதாகப் புறநானூறு கூறுகிறது.

சமுதாயத்தில் செல்வ செழிப்பில் வாழும் புரவலர்களை நாடிச் செல்லும் இரவலர்களும் வீரர்களின் நடுகற்களை வணங்கிச் சென்றுள்ளனர் என்ற செய்தியை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

"பெருங்களிற் றடியிற் றோன்று மொருகண்

இரும்பறை யிரவல சேறி யாயின்

தொழாதனை கழித லோம்புமதி வழாது

வண்டுமேம்ப டூஉ மில் வறநிலை யாறே" (Avvai Duraisamy Pillai, 1947)

என்கிறது புறநானூறு. பெரிய யானையின் அடிபோலத் தோன்றும் ஒரு கண்ணினையுடைய பெரிய பாறையைக் கொண்ட பாணனே, நீ பகைவனை எதிர்நின்று விலக்கியவனின் கல்லைத் தொழுது செல்லுமாறு வற்புறுத்தப்பட்ட செய்தியையும் காணமுடிகின்றது.

## புனிதநீராட்டிப் பலிகொடுத்தல்

தமிழ்மக்கள் நடுகற்களைத் தெய்வமாக எண்ணி வழிபட்டுப் பின்னர் அக்கல்லிற்குப் பலியும் கொடுத்தனர். நடுகல்லினைப் புனிதநீர் கொண்டு நீராட்டி அவற்றின் மீது மஞ்சள் பூசி பூக்களை மாலையாக சூட்டி வழிபட்டனர். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு நடுகல்நட்டு கோயில் அமைத்து வழிபாடு நிகழ்த்த ஏற்பாடு செய்ததனைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. வெட்சி கரத்தைப் போர்களில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நடுகல்லுக்குப் புனிதநீர் கொண்டு நீராட்டிப் பலி கொடுக்கும் பழக்கம் தமிழகத்தில் ஏற்பட்டது. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

"இல்லடு கள்ளின் சில்குடிச்சீறூர்ப்

புடைநடு கல்லினாட் பலி யூட்டி

நன்னீராட்டி நெய்ந்நறைக் கொளீஇய

மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்" (Avvai Duraisamy Pillai, 1947)

என்று பாடுகிறார். இல்லங்களில் காய்ச்சப்படும் கள்ளையுடைய குடிசையில் வாழும் மக்கள் தம்ஊரின் பக்கத்தில் நடப்பட்ட நடுகல்லுக்கு விடியற்காலையில் புனிதநீராட்டி, நெய்விளக்கேற்றிப் படையலைப் படைத்தனர். நெய்விளக்கு ஏற்றியதால் உண்டான புகை மேகம் போல் எழுந்து தெருவை மணக்கச் செய்கிறது என்று புறநானூறு கூறுகிறது.

நடுகல்லைத் தெய்வமாக வணங்கும்போது அக்கல்லிற்கு மயில் தோகை அணிவித்துத் துடியை முழக்கி, நெல்லாகிய கள்ளினோடு செம்மறி ஆட்டின் குட்டியையும், பலிகொடுத்துக் வழிபாடு செய்திருக்கின்றார்கள் என்கிறது புறநானூறு.

"நடுகற்பீலி சூட்டி நாரரி

சிறுகலத் துகுப்புவுங் கொள்வன் கொல்லோ" (Avvai Duraisamy Pillai, 1947)

இதனை

"கடவுட் பேன்மார்

நடுகல் பீலிசூட்டி, துடிப்படுத்து

தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலிகொடுக்கும்

போக்கு அருங்கவலைய புலவுநாறும் அருஞ்சுரம்" (Balasubramaniyan, 2004)

என்ற அகநானூற்றுப்பாடலால் நடுகற்களுக்கு மக்கள் நெற்களிலிருந்து உருவாக்கப்பட்ட தோப்பிக் கள்ளினைப் படைத்தும், செம்மறியாட்டினைப் பலிகொடுத்தும் வழிபட்டனர் என்பதை அறிய முடிகிறது.

சங்க கால மக்கள் நடுகல்லாக நிற்கும் வீரனுக்கு அவன் விரும்பிய பண்டங்களைப் படையலிட்டுள்ளனர். மேலும் படைக்கபட்ட பண்டங்களை வீரனின் ஆவி ஏற்றுக்கொள்வதாகவும், இச்செயல்களால் அவர்களின் ஆன்மா மகிழ்வதாகவும் நம்பியுள்ளனர். இன்றும் இறந்த முன்னோர்களுக்கு அவர்களுக்குப் பிடித்தமான பண்டங்களைப் படையலிட்டு படைக்கும் பழக்கம் இருந்து வருகின்றதைக் காணமுடிகின்றது.

கணவனை இழந்த பெண் அவனுக்குப் படையலிடுவதற்காகச் சிறிய இடத்தைச் சாணமிட்டு மெழுகும் காட்சியினை

"அடங்கிய கற்பினாய் நுதன்மடந்தை

உயர்நிலை யுலக மவன்புக வார

நீறாடு சுளகிற் சீறிட நீக்கி

அழுத லானாக் கண்ணள்

மெழுகு மாப்பிகண் கலுழ்நீரானே" (Avvai Duraisamy Pillai, 1947)

என்கிறது புறநானூறு. இறந்த தந்தைக்குப் புதல்வர்கள் மயானம் சென்று படையலிடும் பழக்கமும் தமிழரிடம் இருந்ததைப் புறநானூறு கூறுகின்றது.

## முடிவுரை

சங்கத் தமிழர்கள் மறவுணர்வுடன் நடுகற்களைத் தெய்வமாகப் போற்றியுள்ளனர். போர்வீரனுக்கு மட்டுமின்றி மன்னர்களுக்கும், கற்புடைய மகளிர்களுக்கும் நடுகல்நட்டிச் சிறப்பு செய்திருக்கின்றனர். இறந்தோருக்கு நடுகல் வைத்து மலர்மாலைகளும், மயிற்பீலிகளும் சூட்டிப் படையலிட்டு வழிபடுதல் இறந்தோருக்குப் பிண்டம் வைத்தல், அவர்கள் மேலுலகம் செல்ல வழிபட்டு வணங்குதல் போன்றவற்றைப் புறநானூற்றின் வழி அறிய முடிகின்றது. இன்றைய ஆராய்ச்சியாளர்கள் கண்டறியக்கூடிய வகையில் அன்றே நடுகல்லின்மீது இறந்தவர்களின் பெயர்களும், அவர்களின் சிறப்பினையும் அறிந்துகொள்ளும் வகையில் நடுகல் அமைக்கப்பட்டுள்ளதையும் காண முடிகின்றது. நாடுகாக்கும் உரிமைப்போரில் தன்னுயிரையும் கொடுத்தவர்களை அன்றுதொட்டு இன்று வரையிலும் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றும் பண்பினை அறிய முடிகின்றது. சங்கத் தமிழர்கள் நாடு காக்கும் போரிலும், நிரை மீட்கும் போரிலும், தம் குடிகளைக் காக்கும் ஏனைய வழிகளிலும் மாண்டவர்களுக்கு நடுகல் நாட்டிப் பெருமைப்படுத்தியிருக்கின்றனர். அத்தகைய வீர மறவர்களைத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டு வாழ்ந்திருக்கிறார்கள். நடுகல்லைத் தவிர வேறு தெய்வங்கள் இல்லையென்றும் மேலும் சிறுதெய்வ வழிபாட்டிற்கு முன்னோடியாக நடுகல் வழிபாடு விளங்கியிருக்கின்றது. சங்கத் தமிழர் வீரத்திற்கும் நாட்டுப்பற்றிற்கும் கொடுத்திருந்த முக்கியத்துவம் கடவுள் வழிபாட்டையும் விஞ்சி நிற்கின்றது. வீரயுகத்தின் நிலைக்களனாக விளங்கிய புறநானூறு நடுகல் வழிபாட்டிற்கு மிகப்பெரிய அடையாளம் என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

## References

Annamali, V. (2000) Sanga Ilakiyath Thonmak Kalanjiyam, Meyyappan Pathippagam, Chidambaram, India

Avvai Duraisamy Pillai, Su., (1947) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Balasubramaniyan, K.V. (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Ainkurunuru, New Century Book House Pvt Ltd, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

Varadharasan, M. (1959) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License